ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி,-ஆர்,அ,தி,மு,க,'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

கிறது. அது முடிவான பின்னர் அதுபற்றி அறிவிப்பேன். அது வரையிலும் அவர் அத்தகைய கட்சியில் இருக்கிறார் என்று வெளியிடாமல் இருக்குமாறு பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45.

5. கவன ஈர்ப்பு.

பேராவூரணி—வெட்டன்விடுதி சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணியிலிருந்து வெட்டன்விடுதி வரை சென்று கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு இப்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. காரணம், அதற்குப் பாலம் வசதிகள் நன்றாக இல்லை என்பது உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி என்ற திட்டத்தின் அடிப்படையில், போக்குவரத்துத் துறையில் மட்டுமல்ல, இங்கே நெடுஞ்சாலைத் துறையில் மட்டும் 4 மடங்கு நிதியைக் கூடுதலாக ஒதுக்கி, பல்வேறு பாதைகளை—இந்திய நாட்டினுடைய வரலாற்றில் தமிழகத்திலே சிறப்புற நடைபெறுவதற்கு—உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான முறையிலே அந்தப் பகுதியிலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது குறித்து விவர அறிக்கை ஒன்றும் அவைமுன் வைக்கப் பட்டு இருக்கிறது.

அறிக்கை.

பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண் 2, பல்முனை வழித்தடத்தின் அடிப்படையில் பேராவூரணி—வடகாடு 8 நடைகளும், பேராவூரணி—நெடுவாசல் 6 நடைகளும் மற்றும் பேராவூரணி—வெட்டன்விடுதி 2 நடைகளும் இயக்கப்பட்டு வந்தன. சாலை பழுது மற்றும் வருவாய் குறைவு காரணமாக வெட்டன்விடுதிக்கு இயக்கப்பட்ட நடைகள் நிறுத்தப்பட்டன.

தற்போது பேராவூரணி—வெட்டன்விடுதிக்கு 4 நடைகள் 20—9—1992 முதல் இயக்கப்படுகின்றன.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தவுடனேயே மிக அவசரமாக அந்தப் பகுதி மக்கள் நலன் கருதி இரண்டு தடத்திற்குப் பதிலாக, 4 தடவை அந்தப் பகுதிக்கு பேருந்து விட்டிருப்பதை, நான் அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண் 2 பல்முனை வழித்தடமாக அந்தப் பகுதியில் இயங்கி வருகிறது. பேராவூரணியிலிருந்து ஆவணம் மற்றும் நெடுவாசல் வழியாக வெட்டன்குடிக்கு அந்தப் பேருந்து இயங்கிக் கொண்டு இருக்கிறது. நெடுவாசலுக்கு அந்தப் பேருந்து 6 தடவை இயங்கி வருவதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். வெட்டன்குடிக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், நெடுவாசல் வழியாகத் தான் அந்தப் பேருந்து செல்ல வேண்டும். ஆகவே, ஆவணம், நெடுவாசல் வழியாக வெட்டன்குடிக்கு 6 தடவை நீட்டித்துக் கொடுத்தால், புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கிற ஏழைக் கூலித் தொழிலாளர்கள் தஞ்சைப் பகுதிக்குச் சென்று, தங்களுடைய வேலைகளைக் கவனிக்கவும், கூலி வேலைக்குச் செல்வதற்கும் அந்த நகரப் பேருந்து மிகவும் வசதியாக இருக்கும். எனவே 4 தடவை என்பதை, 6 தடவையாக நெடுவாசலில் இருந்து வருகிற அந்தப் பேருந்தை வெட்டன்குடி வரையிலும் நீட்டித்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாராட்டுவார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பெ. பொன்னுசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. பெ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்:

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான (வருவாய்-வரவினங்கள்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முந்தைய அறிக்கைகள், நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் எட்டாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் உள்துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) கல்வித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஆறாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (எண். 2/1989) (சிவில்) கல்வித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஏழாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி எட்டாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஒன்பதாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) தொழில் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை.